


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் உயர்கல்வி பயிலும் 100 மாணவர்களுக்கு டி.பி.எஸ். வங்கியின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 25 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 5 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் டி.பி.எஸ். வங்கியின் தலைமை நிர்வாக இயக்குநர் பரத் மணி, வர்த்தக வங்கி பிரிவு தலைவர் சுஷந்த் ஷெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 358 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3,010 குடியிருப்புகளை திறந்து வைத்து, இக்குடியிருப்பிற்கான 902 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணைகளையும், வீடுகளுக்கான சாவிகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### 2023-2024 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு கூட்டம்!

## குழுத் தலைவர் - அரசுக் கொறடா முனைவர் கோவி.செழியன் தலைமையில்!



தஞ்சாவூர், ஜூலை 14 - தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர் / அரசு தலைமைக் கொறடா தலைமையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு 2023-2024ஆம் ஆண்டிற்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர் / அரசு தலைமை கொறடா முனைவர் கோ.வி.செழியன் தலைமையில் சட்டமன்ற பேரவை மனுக்கள்; குழு உறுப்பினர்கள் செ.சுந்தர ராஜன், மு.பாபு, கே.பொன்னுசாமி, ஆர்.ராதாகிருஷ்ணன்;, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலாளர் முனைவர்.கி.சீனிவாசன், சட்டமன்ற பேரவை துணைச் செயலாளர் கோ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு 2023-2024ஆம் ஆண்டிற்கான ஆய்வுக்கூட்டம் 12.7.2023 அன்று நடைபெற்றது.

ஆய்வின்போது தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத்தலைவர் / அரசு தலைமை கொறடா முனைவர் கோ.வி.செழியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு சட்டப்பேரவையின் 2324 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவால் பெறப்பட்ட மனுக்களின் மீதான பதிலறிக்கை குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்காகவே. அதிலும் மக்களை தேடி அதன் பயன்கள் செல்ல வேண்டும் என்பதை ஆர்வம் கொண்டு ஏழை, எளிய ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு உயர்த்திட ஓயாது உழைத்திடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனதார நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற மனுக்களின் குழுவானது மிக முக்கியம் வாய்ந்த குழுவாகும். சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுவானது பொதுமக்களின் பிரச்சினையை நேரடியாக ஆய்வு செய்து பொதுமக்களை நேரடியாக சந்தித்து பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒரு குழுவாக செயல்படுகிறது. அந்தவகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பொதுமக்களின் மீது பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் அறிக்கை பெறப்பட்டு இன்று தீர்வு செய்யப்பட்டு மனுக்கள் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் குழுவிடம் 494 மனுக்கள் அளிக்கப்பட்டது. அனைத்தும் மனுக்களும் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

அதில் 65 மனுக்கள் இன்று நேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இம்மாவட்டத்தினை சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள், அலுவலர்கள், மனுக்கள் மீது உரிய பதிலளித்தார்கள் என தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத்தலைவர் / அரசு தலைமை கொறடா முனைவர் கோ.வி.செழியன் தெரிவித்தார்.

முன்னதாக, முன்னதாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மாரியம்மன் கோயில் காடவராயன் குளம் மற்றும் வடிகால் வாய்க்காலில் செப்டிக் டேங்க் கழிவு நீரை பி.வி.சி குழாய் மூலம் இணைத்து நீர்நிலை மாசுபடுவதை தடுப்பதை குறித்தும், சமுத்திரம் ஏரியை ஆழப்படுத்தி மதகுகள் மற்றும் சருக்கைகள் கட்டிடம் மற்றும் சீரமைப்பது குறித்தும், நாஞ்சிக்கோட்டை குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாருவதை குறித்தும், அண்ணா நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதி மேம்படுத்துவது குறித்தும், தஞ்சாவூர் புதிய பேருந்து நிலைய கழிவறை வசதி குறித்தும், தேசிய நெடுஞ்சாலை 226 நீட்சியில் திருவையாறு புறவழிச் சாலை அமைக்கும் பணி குறித்தும், வேலூர் கிராமம் இலவச கழிப்பிடம் பழுது குறித்தும் மற்றும் தஞ்சை பெரிய கோயில் அகழி தூர்வாரி சுத்தப்படுத்தி பயன்பாட்டில் கொண்டு வருவது குறித்தும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத்தலைவர், சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு உறுப்பினர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலர், சட்டமன்ற பேரவை துணை செயலர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) எச்.எஸ்.ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஜி.செந்தில்குமாரி, தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சாலை தவவளன் மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

# திருச்சியில் மாநில வேளாண்மை கண்காட்சி!

## ஜூலை 27 முதல் 29 வரை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 14- கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையின் மூலம் பல நூறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023-24 ஆம் ஆண்டில் மாநில வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள், வாழை மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 8.07.2023 மற்றும் 9.07.2023 ஆகிய தேதிகளில் சென்னையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான கண்காட்சி முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. வேளாண் வணிகத் திருவிழா 2023 மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் ரூபாய் 2.5 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை ஆகியுள்ளது. அச்சமயம், இது போன்ற கண்காட்சிகள் விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, ஜூலை 27-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி முடிய திருச்சியில் மாநில வேளாண் கண்காட்சி (வேளாண் சங்கமம்) நடைபெறும். இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம் 10.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் பழமரக்கன்றுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதுடன், அவற்றை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கு தேவைப்படும் அனைத்து வேளாண் இயந்திரங்களையும் காட்சிப்படுத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அமைத்திட வேண்டும் எனவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். அதிக அளவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

விவசாயிகளுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மின்னணு விற்பனை, வேளாண் காடுகள், உயரிய தோட்டக்கலை தொழில்நுட்பம், நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண் ஏற்றுமதி போன்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், சிறப்புச் செயலாளர் முனைவர் இரா.நந்தகோபால், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமையின் செயல் இயக்குநர் (பொ) த.அன்பழகன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மருத்துவர் ஆர்.பிருந்தாதேவி, வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா.முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

# வரும் கூட்டுறவு சங்கத் தேர்தலில் 100 சதவீதம் வெற்றியை ஈட்டுவோம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை, ஜூலை 14- மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார்.

கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்ல.சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழிதிருமாவளவன், மயிலாடுதுறை வடக்கு என்.இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான.இமையநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, மயிலாடுதுறை மேற்கு மூவலூர் மூர்த்தி, செம்பனார் கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயகுமார், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், குத்தாலம் வடக்கு கு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஏ.ஆர்.ராஜா, சீர்காழி மேற்கு ஏ.ஜி.ஜெ.பிரபாகர், சீர்காழி கிழக்கு பஞ்சுகுமார், நகரச் செயலாளர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சீர்காழி ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.வெற்றிவேல், பி.சிவதாஸ், நத்தம் வின்சென்ட், காந்தி, சுபாநெடுஞ்செழியன், எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், பேரூர் கழகச் செயலாளர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எம்.அன்புச்செழியன், குத்தாலம் எம்.சம்சுதீன், தரங்கம்பாடி முத்துராஜா, மணல்மேடு அண்ணாதுரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் முத்துகுபேந்திரன், மருது ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :-

மயிலாடுதுறை மாவட்டத்தில் கூட்டுறவு சங்க தேர்தலில் மயிலாடுதுறையில் உள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் அனைத்து இயக்குனர் பொறுப்புக்கும் கழகத்தை சேர்ந்தவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தி வெற்றி பெற வைத்து அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கழகத்தை சேர்ந்தவர்கள் தலைவர், துணைத்தலைவராக வெற்றிப் பெற செய்து வெற்றியை தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடம் சமர்ப்பிப்பது என்றும், கூட்டுறவு சங்க தேர்தல் கழகத்தை சேர்ந்தவர்கள் வெற்றியடைய செய்ய மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத்தை சேர்ந்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி கழகம் 100 சதவீத வெற்றியை பெற்றிட வேண்டும் என்றும்,

கழக இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு ஒரு நாள் முழுவதும் நேரம் ஒதுக்கி கழக மூத்த முன்னோடியும், பெரியார் விருது பெற்ற மறைந்த மிசா பி.எம். மதிவாணன் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், கழக கொடி ஏற்றி வைத்தும், ஏ.வி.சி. திருமண மண்டபம் அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் 1000 கழக மூத்த முன்னோடிகளுக்கு நேரடியாக பொற்கிழியை வழங்கியும், பெண்களுக்கு தையல் இயந்திரம், சலவை தொழிலாளர்களுக்கு சலவைபெட்டி வழங்கியும், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கியும், அன்று மாலை நடைபெற்ற மயிலாடுதுறை சீனிவாசபுரத்தில் 7000த்திற்கும் மேற்பட்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தமைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்து கொள்வது என்றும்,

நடைபெற்ற மயிலாடுதுறை, நாகை மாவட்டத்தை ஒருங்கிணைத்து நடைபெற்ற திட்டக் குழு உறுப்பினர் தேர்தலில் 100 சதவீதம் கழகத்தினர் வெற்றி பெற்ற அனைவருக்கும் மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறிய பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றிய நிலையில் தற்போது ஏழை குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000 உரிமைத் தொகையை செப்டம்பர் 15ம் தேதி தொடங்கி வைக்க உள்ள நிலையில் இந்த திட்டத்திற்கு என்று ரூ.7 ஆயிரம் கோடி நிதியை ஒதுக்கி அரசாணை வெளியிட்ட கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. சீனுவாசன்

**ஜூலை 14 (2016)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**அச்சிறுப்பாக்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், பேரூர்ச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், அச்சிறுப்பாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய இயக்குநர் ஆகிய பதவிகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**